D E P O S I T I O N  OF W I T N E S S

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

PALLAVARAM.

Case No.355/2023

P.W.1

Name :Tr. Padmavathy

Father/Husband Name : W/o Purusothaman

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 15.05.2025

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழ்கட்டளை சாய் தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் சிவஸ்ரீ டெக்ஸ்டைல் என்ற பெயரில் துணி கடை வைத்துள்ளேன். கடந்த 13.04.2022 ம் தேதி நான் கடையை மூடி விட்டு வீட்டிற்கு செல்வதற்காக இரவு 9.00 மணிக்கு மேல் சாய் தெரு முனையில் சார்ச் அருகே அடுக்கு மாடி அருகே நடந்து சென்றுக்கொண்டிருந்த போது முகம் மூடி அணிந்துக்கொண்டு இரண்டு நபர்கள் பின்னால் வந்து நான் அணிந்திருந்த தங்க தாலி செயின் 4 சவரன் மற்றும் தங்க செயின் 3 சவரன் ஆகியவற்றை கழுத்திலிருந்து அறுத்து பறித்து சென்று விட்டார்கள். இது பல்லாவரம் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் போலீஸசார் என்னை விசாரணை செய்த பின்னிட்டு மேற்படி எனது நகையை கண்டுபிடித்து விட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டு நீதிமன்றத்தில் மனு செய்து 4 சவரன் தங்க செயினை எனது பொறுப்பில் திரும்ப பெற்று சென்றேன். நீதிமன்றத்தில் என் முன்பாக காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள நகையை தான் நான் மனு செய்து பெற்றுக்சென்றேன். மேற்படி புகைப்படம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4 சவரன் தங்க செயின் அசாபொ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீஸ்சார் இந்த வழக்கு தொடர்பாக என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

புகார் மனுவை நான் எனது கைப்பட எழுதினேனா என்றால் என் மகள் எழுதினாள் நானும் எனது மகளும் சேர்ந்து தான் புகார் கொடுத்தோம். நான் கொடுத்த புகார் மனுவில் வாகனத்தின் பதிவு எண் மற்றும் நிற பற்றி தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இரு சக்கர வாகனத்தில் வந்த நபர்களின் உடையின் நிறம் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகார் மனுவில் என்னிடமிருந்து பறித்து சென்ற செயினின் மாடல் குறித்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் எனது கழுத்திலிருந்து செயினை அறுத்துயிருந்தால் எனது கழுத்தில் காயம் ஏற்பட்டுயிருக்கும் என்றால் சரிதான் எனது கழுத்தில் காயம் எதுவும் ஏற்படவில்லை.

எதிரிகளை கைது செய்து எனது செயினை கைப்பற்றியதாக போலீஸ்சார் எப்போதுஎன்னிடம் தெரிவித்தார்கள் என்றால் புகார் கொடுத்து 2 மாதம் கழித்து கூறினார்கள். அதன் பின்னிட்டு காவல் நிலையம் சென்றீரா என்றால் சென்றேன். எதிரிகளை காவல் நிலையத்தில் பார்த்தீரா என்றால் இல்லை. நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்ட நகை என்னுடைய நகை கிடையாது என்றால் என்னிடமிருந்து பறித்து சென்ற செயின் மாடல் கிடையாது வேறு ஒரு மாடல் செயின் தான் பெற்று சென்றேன்.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**

**மறு விசாரணை - இல்லை.**

S/d xxxx

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.